கோலாலம்பூரில் அடிக்கடி வெள்ளம் ஏற்படும்

# மேலும் 14 பகுதிகள்

## மாநகர் மன்றம் அடையாளம் கண்டது




கோலாலம்பூர், ஆக. 25- தலைநகர் கோலாலம்பூரில் திடீர் வெள்ளம் ஏற்படக்கூடிய மேலும் 14 இடங்களை கோலாலம்பூர் மாநகர் மன்றம் அடையாளம் கண்டுள்ளது.

அங்கு வெள்ளப் பிரச்சினையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பாக வெள்ளத் தடுப்புத் திட்டங்கள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்று கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா ஷரிப் தெரிவித்தார்.

அடிக்கடி வெள்ளம் ஏற்படும் பகுதிகளுள் ஜாலான் சைட் புத்ரா, ஜாலான் பீல், ஜாலான் டூத்தா மாஸ், ஜாலான் பகாங், ஜாலான் மஹாராஜா லேலா, ஜாலான் ராஜா சுலான், ஜாலான் கெந்திங் கிளாங், (உத்தார் ஷெல்). லோரோங் தித்திவங்சா 11 ஜாலான் பகாங் பாராட், ஜாலான் துன் ரசாக் ஆகியவையும் அடங்கும். ஏற்கெனவே அடிக்கடி வெள்ளம் ஏற்பட்ட 25 பகுதிகளில் வெள்ளத்தைத் தடுக்கும் அல்லது பாதிப்பைக் குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படிருந்தன என்றார் அவர்.

கடந்த வியாழக்கிழமை பலத்த மழை பெய்ததை அடுத்து பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. சிகாம்புட் பைபாஸ், ஜாலான் சுல்தான் அஸ்லான் ஷா, ஜாலான் டூத்தா மாஸ், ஜாலான் கெந்திங் கிளாங். ஜாலான் கெப்போங், ஜாலான் கூச்சிங் ஆகிய பகுதிகளில் திடீர் வெள்ளம் ஏற்பட்டிருந்தது.